**கண்டி மாநகர சபை**
**கண்டி மாவட்டம்**

----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கண்டி மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் பெப்ரவரி 24 ஆந் திகதி முதலீடு செய்யப்பட்டிருந்த நிலையான வைப்பொன்றுக்காக திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 2,991,781 ஆன வட்டி ரூபா 3,164,383 ஆக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 172,602 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 15 நிலையான வைப்புக்களில் மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 4,181,247 கூட்டுத்தொகையான வட்டி மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கொம்போஸ்ட் கூடைகள் கொள்வனவிற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 737,500 தொகை மற்றும் மீளாய்வாண்டில் கொம்போஸ்ட் கூடை விற்பனையால் கிடைத்திருந்த ரூபா 619,015 ஆன வருமானமொன்று நாளாவித வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 1995 ஆம் ஆண்டு வரை நகர சபை வசமிருந்த மின் முறையை இலங்கை மின்சார சபைக்கு கையளிக்கும் போது கையேற்கப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 50,443,104 என நிதிக்கூற்றுக்களில் முற்பண பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் உடன்படிக்கை செய்யப்படாத ரூபா 3,890,446 பெறுமதியான 5 நிர்மாணிப்புக்கள் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,616,118 பெறுமதியான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் 14 தளபாட உருப்படிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயப் பெறுமதியை கணக்கிலிருந்து அகற்றாமல் ரூபா 7,000,120 ஆன மதிப்பீட்டுப் பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

(ஏ) நீர்கட்டண வருமான மென்பொருள் முறைமையின் பிரகாரம் மீளாய்வாண்டின் நீர்க்கட்டன பெறுவனவுகள் ரூபா 527,224,314 தொகை ரூபா 521,481,547 என கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் வருமானம் ரூபா 5,742,767 குறைத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மெனிக்கும்புற மொத்த மற்றும் சில்லறை வியாபார கடை தொகுதி கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 4,433,568 ஆக இருந்த போதிலும் ரூபா 4,331,140 என கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 102,428 குறைத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) போகம்பர வியாபார தொகுதியின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் நிலுவையாக இருந்த ரூபா 3,259,001 ஆன கடை வாடகை மற்றும் தண்டப்பண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) முச்சக்கர வண்டி கட்டணங்கள் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 17,860,626 ஆன நிலுவை மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை

(ஔ) மீளாய்வாண்டில் இறுதியில் டிஜிடல் காட்சி அறிவித்தல் திரைக்காக 4 மாதங்களுக்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 406,000 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 8 கணக்கு விடயங்களின் மீதிகின் கூட்டுத்தொகை ரூபா 476,300,843 ஆக இருந்ததுடன், பதிவேடுகள்/ பட்டோலைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 482,674,884 ஆக இருந்தமையால் ரூபா 6,374,041 தொகையான வேறுபாடு கண்டறியப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 11 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 501,474,277 ஆக காணப்பட்டதுடன். அவற்றில் 1 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 406,491,963 ஆக காணப்பட்டது. அதில் 2017 யூலை 31 ஆந் திகதி உள்ளவாறு மேலும் பெற வேண்டிய 11 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 404,815,451 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 573,732,974 கூட்டுப்பெறுமதியான செலுத்த வேண்டிய 4 கணக்கு மீதிகளில் ரூபா 430,938,795 தொகை செலவினக் கடன்கொடுத்தோராக இருந்ததுடன், அவற்றில் 1 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 67,093,507 ஆக காணப்பட்டது. 2017 யூலை 31 ஆந் திகதி உள்ளவாறு ரூபா 399,715,074 ஆன மீதியொன்று செலுத்த வேண்டியதாக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

14 கணக்கு விடயங்களுக்கு உரித்தான தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 1,161,810,807 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டம் (252) ஆவது அதிகாரம் | |
| | 227 ஆம் பநந்திக்கு அண்மித்ததாக 2002 ஆகஸ்ட் ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 1249 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் உபவிதிக் கோவையின் 111 ஆவது பகுதியின் 4(இ) ஆம் பந்தி | 2.5 ஏக்கர் அளவிலான காணியுடன் கூடிய கண்டி மாநகர சபைக்குரிய கட்டம்பே விளையாட்டரங்கு 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதல் 26 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் களியாட்டங்களை நடாத்துவதற்காக கேள்வி நடைமுறையொன்றில்லாமல் ரூபா 3,000,000 இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் தாபன விதிக் கோவை- 2013 | |
| | v ஆம் அத்தியாயத்தின் 2.5.4 ஆம் பிரிவு | கண்டி மாநகர சபையின் முதலாவது தர தீயணைப்பு உத்தியோகத்தரொருவருக்கு அவரது வேண்டுகோளின் பேரில் அரச சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த 2015 மே 20 ஆந் திகதி முதல் 2016 மார்ச் 17 ஆந் திகதி வரையான |

காலப்பகுதிக்குரித்தாக ரூபா 422,214 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தி அவரின் சேவைக் காலமும் வழங்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 518,109,683 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 385,165,618 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 132,944,065 ஆன அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

நீர்க் கட்டணங்கள், முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானங்களுக்குரிய சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள், பதிவேடுகளுடன் இணங்காத காரணத்தினால் அவ்வருமானங்களின் கூட்டுத்தொகையான ரூபா 153,719,587 தவிர வீதவரி, குத்தகை வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளவாறு ரூபா 457,543,502 ஆன மீதியொன்று நிலுவையாக காணப்பட்டது.

#### 2.2.2 வீத வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 101,922,032 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது பட்டியல் இடப்பட்டவை ரூபா 283,601,784 ஆக இருந்தது. ஆண்டில் அறவீடுகள் நிலுவையில் 47 சதவீதமும் பட்டியலிடல்களில் 83 சதவீதமாகவும் இருந்தன. 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 100,380,560 ஆன மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. நடப்பாண்டு வீதவரி அறவீடு தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு ஊக்கவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்ட காரணத்தினால் நிலுவையில் அறவீடு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 105,943,556 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது பட்டியல் இடப்பட்டவை ரூபா 67,870,036 ஆக இருந்தது. ஆண்டில் அறவீடுகள் நிலுவையில் 21 சதவீதமும் பட்டியலிடல்களில் 77 சதவீதமாகவும் இருந்தன. 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 98,906,302 ஆன மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், நிலுவை வீதவரி அறவீடுகளில் பலவீனங்கள் காணப்பட்டன. இது 2017 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 80,681,995 ஆக இருந்தது.

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

#### (அ) நீர்க் கட்டணங்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100,906,508 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன் இந்நிலுவை மீதிகளின் காலப் பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படவில்லை.

#### (ஆ) களியாட்ட வரி

கண்டி எசல பெரஹரவிற்கு அண்மித்ததாக கண்டி மாநகர சபைக்குரிய கெட்டம்பே விளையாட்டரங்கு மற்றும் கட்டுகஸ்தோட்டை ராகுல வித்தியாலத்திற்குரிய விளையாட்டங்கில் 2016 ஆகஸ்ட் 08 ஆம் திகதி முதல் 2016 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரை நடைபெற்ற செல் மெகா சனேகிலி கண்காட்சிக்கு நுழைவுச் சீட்டுகளுக்கு முத்திரையிட சமர்ப்பித்தல், முத்திரையிடல், அச்சக நிறுவனத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், பதிலேடுகளுக்கு உட்படுத்தல், கோவைகளை பேணுதல் மற்றும் 1984 இல் 37 ஆம் இலக்க களியாட்ட வரி (திருத்த) சட்டத்தின் பிரகாரம் களியாட்ட வரி அறவீடுகள் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

#### (இ) காணி வரி

காணி வரி பதிவேட்டின் பிரகாரம் சபையினால் 1078 காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், பட்டியலிடலாக 51 மாத்திரம் இனங் காண்பிக்கப்பட்டிருந்தன. குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள சகல காணிகள் தொடர்பாக தொடர்ச்சியாக பட்டியலிடல் முறைமை பின்பற்றப்படாதிருந்ததுடன், காணி பதிவேட்டின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு 981 ஆக இருந்தன. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 34,952,454 ஆன நிலுவை வருமானம் மீதியொன்று காணப்பட்டது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,385,567 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 33,745,673 ஆன முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 70,483,540 பெறுமதியான 57 மூலதன செயற்திட்டங்கள் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்ததடன் ரூபா 143,000,000 பெறுமதியான 08 செயற்திட்டங்கள் தொடர் வேலையாக்கப்பட்டிருந்தன.

(ஆ) 1987 செப்தம்பர் 30 ஆந் திகதி 08 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம்

தாபிக்கப்பட்டுள்ள நகர அபிவிருத்தி வங்கிக் கணக்கில் காணப்படும் ரூபா 12,316,870 தொகையை எந்த அபிவிருத்தி செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) உலக மரபுரிமை அபிவிருத்தி நிலையத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,879,949 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் இந்நிதியத்தைப் பயன்படுத்தி உலக மரபுரிமை பாதுகாப்பிற்காக எந்த செயற்பாட்டிற்கும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சீன வெளிநாட்டுச் சுற்றுலா**

சீனாவின் கழிவுப்பொருள் முகாமைத்துவம் உட்பட 6 விடயங்கள் தொடர்பாக சீனநகர சபையில் நடைபெற்ற கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2016 யூன் 24 ஆந் திகதி முதல் 28 ஆந் திகதி வரை மாநகர சபை மாநகர முதல்வருடன், 18 உறுப்பினர்கள் மற்றும் மாநகர ஆணையாளருடன் 10 உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு ரூபா 10,904,726 தொகை மாநகர சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் அவ்விடயங்களுக்குரிய தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் சமூகமளிக்க வேண்டிய போதிலும் அதற்கு புறம்பான துறைகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் எவ்வித அடிப்படையொன்றுமில்லாமல் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(ii) மாநகர சபையின் பதவிக்காலம் 2016 யூன் 30 ஆந் முடிவடைவதற்கு அண்மித்திருக்கையில் வெளிநாட்டு செயலமர்வுகளுக்கு சமூகமளிக்கச் செய்தமையால் அதன் மூலம் பெற்றுக்கொண்ட அறிவினை அதிகாரப் பிரதேசததின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தமையால் அவர்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 6,819,027 தொகை பயனற்ற செலவினமாக இருந்தன.

**(ஆ) வாகன நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஓட்டக் குறிப்புகளில் பிரயாண விபரங்களோ பிரயாணம் செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்களோ குறிப்பிடப்படாமல் 34,392 கி.மீ. ஓட்டத்தில் ஈடுபடுத்தி அதற்குரிய எரிபொருளுக்காக ரூபா 593,586 செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே எழுமாறாக பெற்றுக் கொண்ட 06 வாகனங்களின் நாளாந்த ஓட்டப் பதிவேடுகளில் 137 நாட்கள் வெளியேறிய நேரம் வருகை நேரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டு மற்றும் 2016 ஜனவரி 01 முதல் யூலை 08 வரை பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் 15 மாநகர சபை உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட பிரயாணங்களுக்காக 11,710 கி.மீ. ஒட்டத்தில் ஈடுபட்டு ரூபா 175,959 எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(iii) 2014, 2015 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வாகன விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் வாகனங்களை பயன்படுத்திய உத்தியோகத்தர்களின் கையொப்பமிட்டு 52,140 கி.மீ. ஓட்டத்தில் ஈடுபடுத்தி ரூபா 822,680 எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 3 வேன் வண்டிகள் சபையின் நியதிகள் மற்றும் உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்குப் புறம்பாக ஓட்டத்தில் ஈடுபடுத்தியதற்காக 2015 மற்றும் 2016 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 264,824 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(v) வாகனமொன்றில் 2015 திசெம்பர் 01 ஆந் திகதி இடம்பெற்ற தொழில்நுட்ப கோளாறு காரணமாக நகர சபை தொழில்நுட்ப வேலை பிரிவில் பல சந்தர்ப்பங்களில் ரூபா 611,200 கூட்டுத்தொகையான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2016 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலைமைக்கு உட்படுத்த முடியாதிருந்தது.

**(இ) ஊழியர் கடன்**

-----------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2004 முதல் 2016 வரை காலப்பகுதியில் இறந்த, ஓய்வுபெற்ற, வேலையை விட்டுச்சென்ற மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 98 ஊழியர்களிடமிருந்து ரூபா 6,212,219 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சுனாமி அனர்த்தத்தின் போது காணாமல் போன உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 67,296 ஆன கடன் மீதி 12 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், தீர்வு செய்யாமல் கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது.

(iii) 1995 இல் இலங்கை மின்சார சபைக்கு இணைக்கப்பட்ட 34 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 77,271 ஆன கடன் மீதியொன்றும் அவ்வாறு இணைக்கப்பட்டிருந்த 30 உத்தியோகத்தர்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்டிருந்த ரூபா 122,513 ஆன மீதியொன்றும் 21 வருட காலமாக தீர்வுசெய்யப்படாமல் கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டன.

(iv) இடமாற்றம் பெற்றுச் சென்ற 180 உத்தியோகத்தர்களிடமிருந்து 1998 முதல் 2016 வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 12,766,367 ஆன கடன் மீதியொன்றும் 26 உத்தியோகத்தர்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்டிருந்த ரூபா 106,697 ஆன மீதியொன்றையும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2017 யூலை 25 ஆந் திகதி வரையிலும் ரூபா 10,587,659 ஆன கடன்மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**(ஈ) வங்கிக் கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2 வங்கிக் கணக்குகளுக்குரிய 2013 ஆண்டிலிருந்து 2016 ஒக்தோபர் 31 வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், தீர்வையாகாத ரூபா 80,999 பெறுமதியான 19 காசோலைகளும் காசேட்டின் பிரகாரம் வங்கி வைப்புக்களாக இணங்காணப்பட்டிருந்த 9 உருப்படிகளுக்குரிய ரூபா 95,284 உடன் ரூபா 176,283 கூட்டுத்தொகையான வங்கி வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கி நேரடி வைப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 2,310,366 பெறுமதியான 115 உருப்படிகள் மற்றும் நேரடி வரவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 156,419 பெறுமதியான 11 உருப்படிகள் 2017 மார்ச் 31 வரையிலும் இணங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது வைப்புக்கள்**

2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரையான காலப்பகுதியில் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக 469 சந்தர்ப்பங்களின் போது கிடைத்திருந்த ரூபா 1,013,225 தொகை மற்றும் வருமானமாக திட்டவட்டமாக இணங்காண்பதற்கு முடியுமான மற்றும் உரிய செயறபாட்றகாக பயன்படுத்தக்கூடிய 28 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 13,096,634 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணி**

போவல கொரகஹமுளதன்ன பெயருடைய காணியின் 279 ஆம் இலக்க திட்டவரைபடத்தில் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட 02, 03 ஏ, 11சீ மற்றும் 13 பீ ஆம் இலக்கங்களைக் கொண்ட 34.90 பேர்ச்களுடன் கூடிய காணியின் பகுதிகள் பொது நடவடிக்கைகளுக்காக மாநகர சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அரச இல்லங்கள்**

10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையில் சேவை புரிந்து ஓய்வுபெற்று, இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச்சென்ற 8 உத்தியோகத்தர்கள் மாநகர சபைக்குரிய வீடுகளிலிருந்து

வெளியேறாமல் இருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வீடுகளிலிருந்து ரூபா 683,109 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பொருளிருப்பு மற்றும் எழுதுகருவி களஞ்சியங்களின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம், 14 பொருள் உருப்படிகளில் மிகையும் 86 உருப்படிகளில் பற்றாக்குறையும் 87 எழுதுகருவி உருப்படிகளில் மிகையும் 114 உருப்படிகளில் பற்றாக்குறையும் காணப்பட்டன.

(ii) எரிபொருள் களஞ்சியத்தில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,571,232 பெறுமதியான 67 இருப்பு உருப்படிகளில் பற்றாக்குறையும் ரூபா 1,234,042 பெறுமதியான 25 உருப்படிகளில் மிகையும் காணப்பட்டன. பெறுமதி குறிப்பிடப்படாத 11 இருப்பு உருப்படிகளில் மிகையும் காணப்பட்டன.

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முறையான கேள்வி நடைமுறையொன்றைப் பின்பற்றாமல் மாநகர சபை வளவில் 50 சதுர அடி அளவிலான பகுதியொன்றில் சிற்றுண்டிச்சாலையொன்று நடாத்திச் செல்வதற்கு வெளித்தரப்பினருக்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து மாதாந்தம் ரூபா 7,000 தொகையான வாடகை மாநகர சபை உத்தியோகத்தர்களின் விளையாட்டு கழகத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாநகர சபை வளவிற்கு நுழையும் இடத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு கூடத்திற்கு அண்மித்ததாக கட்டிடத்தில் 25 சதுர அடிக்கு அண்மித்த பகுதியில் நடாத்திச் செல்லப்படும் பால் விற்பனை நிலையம் தொடர்பாக எவ்வித சட்ட ரீதியான ஆவணங்கள் சபை வசம் இல்லாமல் இருந்ததுடன், அதிலிருந்து எவ்வித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 விளைவற்ற சொத்துக்கள்

2016 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரையிலும் ரூபா 292,194 பெறுமதியான 811.65 மீற்றர் காக்கி ரீல் துணி (60'' அகலம்) மற்றும் ரூபா 397,660 பெறுமதியான 1484 ரீசேட் விநியோகிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர சபை நிதியத்தின் கீழ் நுவரவெல விளையாட்டரங்கிற்கு அருகில் மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 11,620,388 தொகை 2016 மார்ச் 16 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கு கேள்வி விண்ணப்பத்தை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பாமல் தலைமை நகர பொறியிலாளரால் குறைந்த விலையை முன் வைத்திருந்த ஒப்பந்த நிறுவனத்திற்கு நிர்மாணத்தை கையளிப்பதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே உத்தேச நிர்மாணம் தொடர்பாக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளல், நிர்மாணம் மேற்கொள்ளும் இடத்தின் மண் மாதிரியை பரிசோதித்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றாமல் திட்டம் தயாரிக்கப்பட்டு நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக கட்டிடத்தின் இயலளவு குறைவடைவதற்கு நேர்ந்திருந்தது.

(ஆ) மாநகர சபையின் சுகாதார திணைக்கள அலுவலக கட்டிடத்தின் மேல் மாடியின் மண்டபத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,023,224 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.6 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும், கேள்வி கோரியதன் பின்னர் 2015 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 8(92) ஆம் இலக்க சபை தீர்மானத்தின் மூலமாகும். அவ்வாறே கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.3.5 (ஆ) பிரிவின் பிரகாரம் கேள்வி சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தகாரர் நிறுவனம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (ICTAD) பதிவினை சமர்ப்பித்திருக்கவில்லை.

(இ) மஹய்யாவ தகணகூடத்திற்காக மலசலகூட தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக நிதியத்தின் கீழ் ரூபா 1,632,385 ஆன மதிப்பீட்டு தொகையில் ஒப்பந்தகாரர் நிறுவனமொன்றுடன் 2016 திசெம்பர் 20 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்பொள்ளப்படுகின்றன.

(i) 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.5(ஆ) ஆம் பிரவின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக கேள்வி கோரப்பட்ட சந்தர்ப்பத்தில், கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2 நிறுவனங்களின் செல்லுபடியான பதிவு சமர்ப்பிக்கப்படாதிருக்கையில் சபையால் கேள்வி மதிப்பீட்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மலசலகூட முறைமை நிர்மாணிப்பதற்கு உத்தேசித்த இடத்தில் காணப்பட்ட இலங்கை மின்சார சபைக்குரிய மின் கம்பமொன்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஒப்பந்தகாரருக்கு நிர்மாணம் கையளிக்கப்பட்ட காரணத்தினால் 2017 யூன் 29 ஆந் திகதி வரை நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(ஈ) மாநகர சபைக்குரிய மத்திய வியாபாரச்சந்தை நவீனமயப்படுத்தப்பட்டு நிர்மாணிப்பதற்காக ரூபா 1,800,000,000 அண்ணளவான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு 2013 நவம்பர் 25 ஆந் திகதி பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்பொள்ளப்படுகின்றன.

(i) 2014, 2015, மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வருடாந்த பாதீடுகளில் ரூபா 20,000,000 மற்றும் ரூபா 10,000,000 வீதம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், வியாபார தொகுதியிலுள்ள வர்த்தக சமூகத்தினரிடமிருந்து கிடைத்த எதிர்ப்பு காரணமாக புதிய வியாபாரத் தொகுதி நிர்மாணத் திட்டமிடல் இடை நடுவில் கைவிடப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டில் மேற்படி நிர்மாணம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2016 மே 30 ஆந் திகதி

பொதுச்சபை, சாத்தியவள அறிக்கையொன்றை தயாரிக்க வேண்டுமென தீர்மானித்திருந்தது.

(iii) சமூக விஞ்ஞானம் சார்ந்த கணிப்பீடொன்றை மேற்கொள்வதற்கு 2016 யூலை 20 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டு பேராதனை பல்கலைக்கழகத்துக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கணிப்பீட்டு அறிக்கையை 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மஹய்யாவ ஆயுர்வேத சிகச்சை நிலையம் மற்றும் விற்பனை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,032,800 ஆன வேலை பெறுமதிக்கு 2017 பெப்ரவரி 27 ஆந் திகதி உடன்படிக்கை செய்யபட்டு நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது. 2017 யூன் 29 ஆந் திகதி வரையிலும் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடத்தின் சுவர் கட்டுவதற்காக வெற்றிடம் கொண்ட சீமெந்து கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், மேற்பார்வை உத்தியோகத்தரால் தரப் பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த சீமெந்து, கற்கள், மணல் மற்றும் சீமெந்து கலவையின் தரம் பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் யன்னல் சட்டகம் வைக்கப்படும் இடத்தில் பிளொக் கல்லின் மீது ‘‘சீல் பீம்’’ இடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) எஸ்.டபிள்யூ.ஆர்.பீ பண்டாரநாயக்க மாவத்தை வியாபார தொகுதி நிர்மாணத்திற்காக மாநகர சபை நிதியத்தின் கீழ் ரூபா 76,088,905 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2017 யூன் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வியாபார தொகுதியின் கீழ் மாடியின் பின்பகுதியில் ஓடைக்கு எல்லையாக நிர்மாணிக்கப்பட்டிருந்த சுவரின் கம்பிக் கூட்டின் கம்பிகள் வெளியில் தெரிந்து கொண்டிருந்ததுடன் அச்சுவரின் வேலைகள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கீழ் மாடியின் கட்டிடத்தில் பின்பகுதி பாதுகாப்பு சுவருக்கு இடையே விராந்தையில் சேரும் நீர் வழிந்தோடுவதற்கு முறையொன்று தயாரிக்கப்படாமல் இருந்தமையால், மழை நாட்களில் சேரும் நீர் கட்டிடத்தின் உள்ளே வழிந்தோடுவதால் கடைகளிலும் நீர் நிரம்பியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) ரூபா 76,088,905 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த 3 மாடிகளுடன் கூடிய கட்டிடத்தின் கூரைக்காக பழைய கூரையிலிருந்து கழற்றப்பட்ட அமானோ கூரைத்தகடு பொருத்தப்பட்டிருந்ததுடன், அந்த கூரைத் தகடுகளில் அநேகமான இடங்களில் காணப்பட்ட துவாரங்களினால் மழை காலங்களில் கட்டிடத்தினுள் நீர் கசிந்து காணப்பட்டது.

(எ) ரஜபிஹில்ல மாவத்தை, கினிஹிரியில இரண்டு வீடுகளுக்கு அருகில் வடிகாண் ஒன்றையும் படிகளையும் நிர்மாணிப்பதற்காக சபை நிதியத்தின் கீழ் 2016 நவம்பர் 06 ஆந் திகதி ரூபா 257,921 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. படிகளுக்கு கொங்கிரீட் இடுவதற்காக 1:21/2:5 (25மி.மீ)

அளவில் 4 அங்குல தடிப்பில் கொங்கிரீட் இடப்பட வேண்டிய போதிலும், நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் படிகளை பல இடங்களில் உடைத்து பரீட்சித்த போது பரீட்சிக்கப்பட்ட இடங்களில் தடிப்பு 2'' அங்குலமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) ரஜவத்த சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் வாகன நிறுத்துமிடத்துடன் அலுவலக தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக கேள்வி கோரி ரூபா 62,070,559 தொகைக்கு 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்நிர்மாணம் தொடர்பாக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மண் மாதிரி பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மாநகர சபையின் விஷேட நிர்மாண செயற்திட்டப் பிரிவின் மூலம் நேர் முறைமை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு 7 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டு 2014 மே 12 ஆந் திகதி வரையிலும் நிலத்தை வெட்டி அத்திவாரம் வரை தூண்கள் நிர்மாணிக்கப்பட்டு உரிய செயற்பாடு கைவிடப்பட்டிருந்தது.

(iii) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1304/18 மற்றும் 2003 செப்தம்பர் 05 ஆந் திகதிய விசேட வர்த்தமானியின் மூலம் செல்லுபடியாக்கப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட 1249 ஆம் இலக்கம் மற்றும் 2002 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய வர்த்தமானியின் iv(அ) பகுதியில் வெளியிடப்பட்ட உப சட்ட விதிக்கோவையில் iii ஆம் பகுதியின் 4(ஆ)(i) பிரிவின் பிரகாரம் மாநகர சபைக்கு ஒப்பந்தக்காரர்கள் ரூபா 500,000 இற்கோ அல்லது அதற்கு குறைந்த மதிப்பீட்டுப் பெறுமதிக்காக மாத்திரமாக இருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்து மேற்படி நிர்மாணித்திற்குரிய ரூபா 70,080,349 தொகையான பொறியியலாளர் மதிப்பீட்டிற்காக கேள்வி கோரலின் போது ICTAD C 4 அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது கண்டி மாநகர சபையின் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் களிடமிருந்து விலை கோருவதாக பிரசித்தப்பட்டு கூறுவிலை கோரப்பட்டிருந்தது.

(iv) குறைந்த விலையை விட கூடிய விலைக்கு விண்ணப்பித்த இரண்டு ஒப்பந்தகாரர்களின் அறிவிப்பின் பிரகாரம் நியாயமான காரணமொன்றில்லாமல் ரூபா 61,760,211 ஆன குறைந்த விலை சமர்ப்பித்திருந்த ஒப்பந்த நிறுவனத்திற்கு கேள்வி வழங்குவதை கேள்விச் சபை நிராகரித்திருந்தது.

(v) பின்னர் குறைந்த விலையை விட கூடிய தொகைக்கு கேள்வி சமர்ப்பித்திருந்த அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் தெரிவுசெய்யப்பட்டு ரூபா 62,070,559 தொகைக்கு 2015 மே 15 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கும் இணக்கப்பாட்டின் பேரில் 2014 ஆகஸ்ட் 15 உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை 25 ஆந் திகதி வரையிலும் உரிய நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.7 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளொன்றுக்கு 175 தொன் கழிவுப்பொருட்கள் உருவாவதுடன் உக்கக்கூடிய கழிவுப் பொருள் கொஹாகொடை தேக்கவத்த கழிவுப்பொருள் தொகுதியில் இடப்பட்டு வந்தன. உக்கும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி கொம்போஸ்ட் பசளை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் உற்பத்தி செய்யப்பட்ட 2000 கி.கிராம் அளவிலான கொம்போஸ்ட் பசளை விற்பனை செய்வதற்குப் பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிளாஸ்ரிக் மீள்சுழற்சிக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து பிளாஸ்ரிக் தூளாக்கப்பட்டு விற்பனை செய்வதற்கு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டு 2017 யூன் 07 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 1,975,170 ஆன வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் பெறுகைகள், நாளாந்த உற்பத்தி அளவுகள் மற்றும் விற்பனைகள் என்பன முறைப்படி பதிவேடுகளுக்கு இடும் முறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் 2014 செப்தம்பர் 23 ஆந் திகதி பொலித்தீன் மீள்சுழற்சிக்காக இயந்திரமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் அவ்வியந்திரம் பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.8 அனுமதியற்ற நிர்மாணங்கள்**

-----------------------------------------------------

கண்டி நகரில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 4 வர்த்தக கட்டிடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 11(ஏ) பகுதியின் 8(ஜே) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டு மாடிகளுடன்கூடிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 4 வர்த்தக கடடிடங்களும் அங்கீகாரமின்றி 4 மாடிகள் வீதம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8(ஜே) பிரிவின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லை முதல் அனைத்து புதிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதான மற்றும் உப வீதிகளின் எல்லை நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(இ) உலக மரபுரிமை கட்டிடங்களின் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப உப குழு அறிக்கையின் நிபந்தனைகளுக்கு புறம்பாக உரிய கட்டிடத்தின் பாதுகாக்கப்பட வேண்டிய அனைத்து பகுதிகளும் உடைத்து அகற்றப்பட்டு 3 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஈ) உலக மரபுரிமை கட்டிடங்களின் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகள் உடைத்து அகற்றப்பட்டு அதற்குப் இடப்பட்டிருந்த உலக மரபுரிமை முத்திரையுடனான பலகை மாத்திரம் புதிய கட்டங்களின் சுவர்களுக்கு

பொருத்தப்பட்டிருந்ததுடன் உலக மரபுரிமை நியதிகளுக்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்ட நவீன கட்டிடங்கள் உலக மரபுரிமை கட்டிடங்களாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன.

(உ) வர்த்தக கட்டிடமொன்றில் மோட்டார் வண்டிகளை நிறுத்துவதற்கு இடசதிகள் ஒதுக்கப்படாமையால் கட்டணங்களிலிருந்து அக்கட்டிடம் விடுவிக்கப்பட்டிருந்தமையால் நகர சபை நிதியத்திற்கு ரூபா 1,680,000 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டுப் பதிவேட்டின் படி, மதிப்பிடப்பட்ட செலவினம், உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 5 வருமான விடயங்களில் 10 சதவீதம் முதல் நூறு சதவீதத்தையும் விஞ்சிய விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 212(ஆ), 2014 மார்ச் 30 ஆந் திகதிய 2014/02 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை மற்றும் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதிய CBK/பாதீடு 2016 ஆம் இலக்க தலைமை கணக்காளரின் கடிதத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமல் முன்னைய ஆண்டின் பாதீட்டின் சதவீதங்களை சேர்த்துக் கொண்டமை மற்றும் 6 மூலதன நிகழ்ச்சித்திட்டங்களின் 21 செயற்திட்டங்களில் 68 செலவின விடயங்களுக்காக ரூபா 640,708,000 மதிப்பீடு செய்யப்பட்டு வருடாந் பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

### 4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 640,708,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கையில் 2006 இன் அரசாங்கக் பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையின் 4.1.1(அ), 4.2.1(அ), 4.2.2 மற்றும் 4:2.3 பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளிலிருந்து விலகி முறையற்ற விதத்தில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134(1) இன் பிராரம் மாநகர சபையின் அனைத்து துறைகளும் மேவுகை செய்யப்படக்கூடிய வகையில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) நிதிக் கட்டுப்பாடு
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்